# பேதுருவின் மாமி



**இயேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமி ஜூரமாய்க் கிடக்கிறதைக் கண்டார். அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜூரம் அவளைவிட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்தாள். (மத் 8:14,15)**

**உடனே அவர்கள் ஜெபஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, யாக்கோபோடும் யோவானோடுங்கூட, சீமோன் அந்திரேயா என்பவர்களுடைய வீட்டில் பிரவேசித்தார்கள். அங்கே சீமோனுடைய மாமி ஜூரமாய்க் கிடந்தாள்; உடனே அவர்கள் அவளைக்குறித்து அவருக்குச் சொன்னார்கள். அவர் கிட்டப்போய், அவள் கையைப் பிடித்து, அவளைத் தூக்கிவிட்டார்; உடனே ஜூரம் அவளை விட்டு நீங்கிற்று; அப்பொழுது அவள் அவர்களுக்குப் பணிவிடைசெய்தாள். (மாற்கு 1:29-31)**

**பின்பு அவர் ஜெபஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, சீமோன் வீட்டில் பிரவேசித்தார், சீமோனுடைய மாமி கடும் ஜூரமாய்க் கிடந்தாள். அவளுக்காக அவரை வேண்டிக்கொண்டார்கள். அவர் அவளிடத்தில் குனிந்துநின்று, ஜூரம் நீங்கும்படி கட்டளையிட்டார், அது அவளை விட்டு நீங்கிற்று; உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள். (லூக் 4:38,39)**

ஒரு நோக்கு சுவிசேஷங்கள் (Synoptic Gospels) என்று அழைக்கப்படுகிற முதல் மூன்று சுவிசேஷங்களிலும் பொதுவாக காணப்படுகின்ற, ஆண்டவர் கூறிய காரியங்கள், அவர் செய்த அற்புதங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். அனைத்து சுவிசேஷ புத்தகங்களிலும் காணப்படுவது, அது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகவும், யாவரும் அறிய வேண்டிய ஒன்றாகவும் காணப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு நிகழ்வே, நாம் மேற்கண்ட வசனங்களில் காண்கின்ற, சீமான் பேதுருவின் மாமியை (ஆங்கில மொழிபெயர்ப்பு தெளிவாக கூறுகிறது, அவரது மனைவின் தாயார் என்று அதாவது மாமியார்) குறித்த காரியம் ஆகும். அவளுடைய பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும், அவள் சீமோன் பேதுருவின் வீட்டில் இருந்தால் என்பது அனைத்து சுவிசேஷங்களிலும்

பதிவு செய்யப்பட்டுள்ளது. அவள் கடும் ஜுரமாய் காணப்பட்டால் என்று வசனம் **(லூக் 4:38)** கூறுகிறது. அவள் சுகம் பெற்ற விதமும் ஒவ்வொரு சுவிசேஷத்திலும் சற்றே வேறுபடுகிறது. ஆனால் அதற்கு காரணம் அதை கண்ணார கண்டவர், எந்த விதத்தில் அதை எப்படி கண்டாரோ, அதுவே பதியப்பட்டுள்ளது. மத்தேயு சுவிசேஷம் அவர் அவளது கையை தொட்டார் என்றும், மாற்கு சுவிசேஷம் கையைப் பிடித்து தூக்கி விட்டார் என்றும், லூக்கா விசேஷம் குனிந்து நின்று ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார் என்றும் கூறுகிறது. எது எப்படி இருப்பினும் அவள் நொடிப் பொழுது சுகத்தைப் பெற்றால் என்பது மட்டும் நிச்சயம்.

யோவான் சுவிசேஷம் இறுதி அதிகாரம் இறுதி வசனம் இவ்வாறு கூறுகிறது, **"இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்." (யோ 21:25)**. இப்படி அநேக காரியங்கள் இருக்கையில் அவற்றில் சில காரியங்கள் மட்டும் எல்லா சுவிசேஷத்திலும் இடம்பெற்று இருப்பது இச்சம்பவம் நமக்கு ஒரு ஆழ்ந்த சத்தியத்தை அறிவிக்கவே ஆகும். இங்கு ஜுரம் என்றும், கடும் ஜுரம் என்றும் கூறப்பட்டிருந்தாலும் உண்மையாய் அவள் எவ்வளவு தீவிரமாய் அதனால் பாதிக்கப்பட்டிருந்தால் என்பது நமக்கு தெரியாது. கொரோனாவை கடந்து வந்த நமக்கு தெரியும் சாதாரண ஜுரம் எத்தனை பேர்களை எவ்வளவாய் பாதித்தது என்று. எனவே ஒருவேளை அவள் அதனால் மோசமாக பாதிக்கப்பட்டு, அதனால் பேதுருவின் குடும்பமே அவளைக் குறித்து கவலை அடைந்து இருக்கலாம். அதனால்தான் வசனம் கூறுகிறது ஆண்டவர் வீட்டிற்கு வந்தவுடன் அவளைக் குறித்து ஆண்டவரிடம் கூறி அவளுக்காக அவரை வேண்டிக் கொண்டார்கள் என்று.

இங்கு அவள் சுகம் பெற்றது மட்டுமல்ல, அவள் சுகம் பெற்றவுடன் உடனே அவள் எழுந்திருந்து ஆண்டவருக்கும், அவரோடு கூட வந்தவர்களுக்கும் பணிவிடை செய்தால் என்பதும் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். இந்த செயலும் மூன்று சுவிசேஷங்களிலும் கூறப்பட்டுள்ளது. இப்பொழுது நாம் இதில் உள்ள ஆழ்ந்த சத்தியங்களை சற்று தியானிப்போம். பேதுருவின் மாமி ஜுரமாய் கிடந்தது போல், இம்மண்ணுலகிலும் பாவத்தினால், சாபத்தினால், ஜென்ம சுபாவத்தினால் மனுகுலத்தில் உள்ள ஒவ்வொருவரும் சோர்ந்து போய், செயலற்றவர்களாய், பாவத்தோடு போராடி, உலகத்தோடு போராடிக் கொண்டிருக்கின்றனர். இதற்கெல்லாம் என்ன முடிவு என்று தெரியாதவர்களாய், வாழ்க்கையின் நோக்கம் தெரியாதவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எளிமையாக கூற வேண்டும் என்றால் எத்தனையோ மக்கள் ஏதோ ஒரு விதத்தில் பாவத்தின் பிடியில் சிக்கி தவிக்கின்றனர். வெளிச்சத்தை காண முடியாமல் இருளில் தவிக்கின்றனர். குடிக்கு அடிமையாகி, பண ஆசைக்கு அடிமையாகி, பாவ சந்தோஷத்திற்கு அடிமையாகி, என இவ்வாறு பல்வேறு விதங்களில் யாருக்கும் பிரயோஜனம் அற்றவர்களாய், தங்களுக்கு தாங்களே பாரமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இப்படியாக வேதனைப்பட்டு கொண்டிருக்கும் நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொருவருக்காகவும், பேதுருவும் அவனது வீட்டாரும் ஆண்டவரிடம் அவளுக்காக வேண்டிக் கொண்டது போல், இன்று தேவபிள்ளைகளாகிய நாம் வேண்டிக் கொள்ள ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.

அன்று தட்டோடுகள் வழியாய் இறக்கி விட்டவர்களின் விசுவாசத்தை கண்டு சுகத்தை அருளிய தேவன், இன்று இப்படியாக வேதனைப்படும் ஒவ்வொருவருக்காகவும் வேண்டிக் கொள்ளும் நம் ஜெபத்தை கேட்கிறார். அதனால் தான் பேதுருவின் மாமியின் பெயர் கூட இல்லாவிட்டாலும், அவள் ஆண்டவரை அறிந்து இருந்தாலோ, விசுவாசித்தாலோ என்பது கூட கூறப்படாதிருந்தும் அவளை சுற்றியுள்ளவர்கள் ஆண்டவரின் அன்பை, வல்லமையை அறிந்தவர்களாக இருந்தபடியினால், அவர்களுடைய வேண்டுதலுக்கு ஆண்டவர் செவிச் சாய்த்தார், பூரண சுகத்தை

அருளினார். இன்று கூட சுவிசேஷ பணி உலகமெங்கிலும் இப்படிப்பட்ட மக்களை தேடிச்சென்று அவர்களை ஆண்டவரண்டை கொண்டு வந்து சேர்த்து கொண்டிருக்கிறது. எப்படி ஒரு மனிதனுடைய வியாதி அவனுடைய சரீரத்தை மட்டும் பாதிக்காமல், மனதையும் சிந்தியையும் பாதிக்கிறதோ, பாவ பாரமும் ஆவி ஆத்துமா மற்றும் சரீரமாகிய மூன்றிலும் பலவீனத்தை கொண்டு வரும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆண்டவர் சிலரை தொட்டிருக்கிறார், சிலரை தொட்டு தூக்கி இருக்கிறார், இன்னும் சிலருக்கு பாவ பிணிக்கு எதிராக கட்டளையிட்டு அதை நீங்குபடி செய்திருக்கிறார்.

இதில் அற்புதமான ஒரு காரியம் என்னவென்றால், அப்படிப்பட்ட சுகத்தைப் பெற்றுக் கொண்டவர், பேதுருவின் மாமியை போல அவருக்கு சேவை செய்ய ஆண்டவர் எதிர்பார்க்கிறார். ஆம் ஒரு காலத்தில் குடிக்கு அடிமைப்பட்டு, அதனால் தன் சொந்த சரீரத்தையும் வாழ்க்கையும் அழித்தது மட்டுமல்லாமல், தன்னை சார்ந்திருக்கும் மனைவி, பிள்ளைகள், பெற்றோர் என பலரும் வேதனைப்படும்படியாய், இந்த சூழலில் இருந்து எப்படி விடுதலை கிடைக்கும் என்று தவிக்கும்படியாய், பேதுருவின் வீட்டில் இருந்தவர்கள் போல், இன்றும் பலர் காணப்படுகின்றனர். ஆனால் ஆண்டவர் அவர்கள் வாழ்க்கையில் இடைப்பட்டு அப்படிப்பட்ட மனிதரை இரட்சித்து. அது பாவபிடியோ, வியாதியோ, சாபக்கட்டுகளோ எதுவானாலும் அதிலிருந்து விடுதலை தரும்பொழுது, சுகம் பெறும் பொழுது, அப்படியாக விடுதலை பெற்ற மனிதர் ஆண்டவரின் அளவில்லா அன்பை வல்லமையைக் கண்டு அதை தன் ஆவி ஆத்தும சரீரத்தில் அனுபவித்ததின் பொருட்டு, அவருக்கே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து அவருக்கு சேவை செய்வோராய், அல்லது அவருக்கு சேவை செய்வோருக்கு பக்கபலமாய் இருப்பவராய் மாறிவிடுகின்றனர்.

எத்தனையோ சபை போதகர்களின், ஊழியர்களின் சாட்சி இதற்கு அத்தாட்சியாகும். அப்போஸ்தலராகிய பவுலும் இதற்கு ஒரு அத்தாட்சியாகும். பலர் கண்டு வேதனை படும்படியாய் இருந்த வாழ்க்கை சூழ்நிலை மாறி அப்படி பாதிக்கப்பட்டிருந்தவரே ஆண்டவருக்கு எழுந்து ஊழியம் செய்வது என்பது வாழ்வை தலைகீழாய் மாறச் செய்வதாகும். இப்படிப்பட்ட ஒரு வித மாற்றத்தையே ஆண்டவர் நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார். ஆம் பேதுருவின் மாமியை போல் நாமும் ஆண்டவரால் சந்திக்கப்பட்டு நம் வாழ்க்கையில் அற்புத மாற்றத்தை பெற்றிருக்கிறோம், ஒவ்வொரு நாளும் ஆண்டவர் அற்புதமாய் நம் ஆவி ஆத்துமா மற்றும் சரீரத்தை போஷித்து வருவதையும், அவர் நமக்கு தந்திருக்கும் ஆவிக்குரிய ஆசிர்வாதங்களையும் பூமிக்குரிய நன்மைகளையும் நாம் பெற்று அனுபவித்து வருவதையும் அறிந்திருக்கிறோம். ஆனால் நாம் ஆண்டவருக்காக செயல்பட்டு இருக்கிறோமா என்பதும், முன்பு நாம் இருந்த நிலையில் இப்பொழுது இருக்கும் மனிதர்களை, ஆண்டவரிடம் கொண்டு வந்திருக்கிறோமா என்பதும் மிக முக்கியமான தாகும். எனவே நாம் ஒவ்வொருவரும் ஆண்டவர் நமக்கு செய்கின்ற நன்மைக்கு நன்றியுள்ளவர்களாய் அவருக்கு பணிவிடை செய்ய புறப்படுவோமாக. ஆமென், அல்லேலூயா.